www.Padasalai.Net www.CBSEtips.in

A

அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2022

பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண்: 012835

தமிழ்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்: 90

பகுதி - I

குறிப்பு : அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. 14×1=14

I. பலவுள் தெரிக:

1. மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னேர் இலாத தமிழ் - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம்
   அ) அடிமோனை, அடி எதுகை ஆ) சீர்மோனை - சீர் எதுகை
   இ) அடி எதுகை, சீர் மோனை ஈ) சீர் எதுகை - அடிமோனை
2. திண்ணியர் என்பதன் பொருள்
   அ) அறிவுடையவர் ஆ) மன உறுதியுடையவர் இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்
3. "மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
   மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய்" - இவ்வரிகள் இடம் பெறும் நூல் .....
   அ) புறநானூறு ஆ) கலிங்கத்துப்பரணி இ) தமிழ்விடுதூது ஈ) நாலடியார்
4. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக:
   அ) தனித்தமிழ்த் தந்தை - 1. மு. வரதராசனார்
   ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் - 2. மயிலை சீனி வேங்கடசாமி
   இ) தமிழ்த்தென்றல் - 3. திரு.வி.க
   ஈ) மொழி ஞாயிறு - 4. தேவநேயப் பாவாணர்
5. உவா உற வந்து கூடும்
   உடுபதி, இரவி ஒத்தார்" - யார் யார்?
   அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி
6. குடும்பம் என்ற சொல் முதன் முதலில் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது.
   அ) நாலடியார் ஆ) திருக்குறள் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
7. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
   அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை
8. வெங்குருதி - இலக்கணக் குறிப்பு தருக.
   அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உரிச்சொற்றொடர் ஈ) உருவகம்
9. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்
   அ) சிவஞான முனிவர் ஆ) மயிலைநாதர் இ) ஆறுமுகநாவலர் ஈ) இளம்பூரணர்
10. 'மூளைக்குள் சுற்றுலா' - யார் எழுதிய நூல்
   அ) தமிழ் நதி ஆ) முகமது இராவுத்தர் இ) வெ.இறையன்பு ஈ) பக்தவத்சல பாரதி

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com
CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in

11. யானை புக்க புலம்போல - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்
அ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது
ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது
இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது
ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

12. சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்
அ) உவமை ஆ) உவமேயம் இ) உத்தி ஈ) உள்ளுறை உவமை

13. சங்ககாலப் பசும்பூண் பாண்டியன் தன்கொடியில் பொறித்திருந்த சின்னம்
அ) வில் ஆ) புலி இ) மீன் ஈ) யானை

14. "கோடை மழை" என்னும் சிறுகதையின் ஆசிரியர்
அ) குழ. கதிரேசன் ஆ) அழ. வள்ளியப்பா இ) சாந்தாதீத் ஈ) இராஜம் கிருஷ்ணன்

பகுதி - II

அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: 3×2=6

15. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?
16. அகநானூறு எத்தனை பிரிவுகளை உடையது? அவை யாவை?
17. ஒரு முக எழினி, பொருமுக எழினி - குறிப்பு எழுதுக.
18. குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.

ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: 2×2=4

19. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக.
20. மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான் - இரு தொடர்களாக்குக.
21. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

இ) எவையேனும் ஏழனுக்கு விடை தருக: 7×2=14

22. *பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:*
அ) நிலத்தக் கௌறனநும்டா அப்பதான் வகுறு நிறையும்
ஆ) புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது

23. *கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும், சேர்த்தும் இரு வேறு தொடர்களை அமைக்க:*
அ) முன் < ஆ) தானே <

CamScanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

24. தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக:
அ) வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.
ஆ) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.

25. உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்திடுக:
அ) கிணற்றுத் தவளைபோல ஆ) எலியும் பூனையும் போல

26. திருவளர்ச்செல்வன், திருவளர்செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

27. பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க : கலை, களை, கழை

28. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக: அ) அமர்ந்தான் ஆ) கலங்கி

29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக: அ) ஒருமையுடன் ஆ) உரணுடை

30. கீழ்க்கண்டவற்றில் ஏதேனும் ஒன்றனுக்கு கொடுக்கப்பட்டுள்ள நான்கு சொற்களைப் பயன்படுத்தி தொடர் அமைக்கவும்:
அ) குதிரை, வேகம், ஓடு, தாவு ஆ) திரை, காண், கைதட்டல், மக்கள்

பகுதி - III

பிரிவு - 1 2×4=

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

31. 'நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்' - இக்கவிதையின் அடி 'தூங்கும் பணிநீரை வாங்கும் கதிரோனே' என்னும் நாட்டுப்புறப்பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக.

32. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

33. சூதும் கள்ளும் கேடு தரும் - திருக்குறள் வழி விவரிக்க?

34. 'ஈசன் மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மீன்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

பிரிவு - 2 2×4

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

35. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

36. தாயும், தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் எவ்வாறு முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

37. மையாடல் - விளக்குக.

38. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

CamScanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3×4=

39. சொற்பொருள் பின்வரு நிலையணியைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)

"சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்
ஏமப் புணையைச் சுடும்".

- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக: (மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கமனசித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கண் மலையே

- திரிகூட ராசப்பக் கவிராயர்.

41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக:

அ) யானைக்கும் அடி சறுக்கும். (அல்லது)

ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்.

42. பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)

பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக.

43. 'மழை' அல்லது 'அறம்' என்னும் தலைப்பில் கவிதை ஒன்றினை எட்டு அடிகளுக்கு மிகாம

பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 3×6=

44. அ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க

(அல்லது)

ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

45. அ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுது

(அல்லது)

ஆ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

46. அ) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை

(அல்லது)

ஆ) "கோடை மழை" - கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக

பகுதி - VI

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக: 4+

47. அ) "குகனோடும் ..... எனத் தொடங்கும் கம்ப இராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக. (அல்லது)

ஆ) "அறிவு" என முடியும் குறள்"

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com
CamScanner